II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE

**OS. 158 /2023**

Deposition of witness for the Plaintiff / PW1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 12.02.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | S.Giridharan | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

1 முதல 3 பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை தொடர்ச்சி—

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 தான் ஆதிலட்சுமியம்மாள் பெயரில் உள்ள வழக்கு சொத்தின் பட்டாவா என்றால் ஆமாம். ஆதிலட்சுமியம்மாள் 04.02.2008 அன்று இறந்தார். அவரது வாரிசுகள் அனைவரது பெயரிலும் 2019 ம் ஆண்டு பட்டா மாற்றப்பட்டது. பட்டா மாறுதலுக்கு வாரிசுதாரர்கள் அனைவரும் மனு செய்தனர். இதனை காட்ட ஆவணம் வைத்திருக்கிறேன். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். வழக்கு 3 ம் அட்டவணை சொத்தின் சர்வே எண். 194/2A ஆகும். 32 செண்ட் விஸ்தீரணம் கொண்டது. 3 ம் அட்டவணை சொத்தை பொருத்து எனது பாட்டி ஆதிலட்சுமியம்மாள் பொது அதிகாரம் கொடுத்து அதன் மூலமாக கிருஷ்ணமூர்த்தி விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றால் அந்த ஆவணத்தை பற்றி எனக்கு தெரியாது. அதற்கு அசல் ஆவணம் கோரிய போது இல்லை என்று சார்பதிவாளர் அலுவலகத்தில் சொல்லிவிட்டார்கள். எந்த ஆண்டு அவ்வாறு ஆவணம் கேட்டேன் என்றால் 2019 ல் கேட்டேன். நான் எழுத்து மூலமாக கேட்டேன். அந்த ஆவணத்தை எடுக்கமுடியவில்லை என்று

சொல்லிவிட்டார்கள். அந்த மூல ஆவணம் என் பாட்டி ஆதிலட்சுமியம்மாள் பெயரில் தான் இருந்தது. எந்த ஆண்டைய ஆவணம் என்று எனக்கு தெரியாது. சார்பதிவாளர் அலுவகத்தில் கோரியதற்கு ரசீது என்னிடம் உள்ளது. அதற்கு எழுத்து மூலமான பதில் எதுவும் கொடுக்கப்படவில்லை. வா.சா.ஆ.14 வில்லங்க சான்றிதழ் எந்த ஆண்டிற்குரியது என்று ஆவணத்தை பார்த்து தான் சொல்லமுடியும். வா.சா.ஆ.14 யை காட்டி கேட்ட போது தன்னிடம் உள்ள ஆவணத்தை பார்த்து தான் சொல்ல முடியும். சாட்சி பிறகு வில்லங்க சான்றை தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும் கூறுகிறார். வா.சா.ஆ.14 ல் 01.01.2010 – 02.03.2023 வரை குறிப்பிடப்பட்டுள்ளது. 2010 ற்கு முந்தைய காலத்திற்கு வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் என் தந்தை போட்டு பார்த்திருப்பார். 3 வது அட்டவணை சொத்தை விற்ற விவரம் 2022 ல் தெரியவந்தது. அது ஏற்கனவே விற்கப்பட்டுவிட்டதாக எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள நிலையில் நான் அதனை சரிபார்த்தேனா என்றால் ஆவணம் கிடைக்காததால் எதிர்வழக்குரையில் இருந்து தெரிந்து கொண்டேன். அதன் பிறகு ஆவணத்தை எடுக்க முயற்சி செய்தும் கிடைக்கவில்லை. 3 வது அட்டவணை சொத்தை கிரையம் பெற்ற கிருஷ்ணமூர்த்தி என்பவரை ஏன் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அந்த கிரைய ஆவணத்தை இப்போது தான் நான் முதன் முறையாக பார்க்கிறேன்.

(இந்நிலையில் சாட்சி வழக்கறிஞருடன் வாதம் செய்ததால் நீதிமன்றத்தின் மாண்பை கருதி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).